# மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்

## பணித்தள பொறுப்பாளர்கள் பயிற்சி கையேடு


மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம், மறைமலைநகர்

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை

தமிழ்நாடு அரசு

2013

# பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் | 1 |
| 2. | பணித்தள பொறுப்பாளர்களின் கடமையும், பொறுப்புகளும் | 4 |
| 3. | வேலைத்தளத்தில் அடிப்படை வசதிகள் | 11 |
| 4. | முன் அளவீடு செய்யப்பட வேண்டியதின் அவசியம் | 13 |
| 5. | பணிகளின் வகைப்பாடுகள் மற்றும் தொழில்நுட்ப குறிப்புகள் | 17 |
| 6. | புதிய சாலை மற்றும் சாலை மேம்பாடு செய்தல் | 21 |
| 7. | பண்ணைக் குட்டைகள் அமைத்தல் | 23 |
| 8. | கருவேல மரம் நடுதல் | 31 |
| 9. | தூய்மை பாரத இயக்கம் - திட்டத்துடன் இணைந்து தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுதல் | 33 |
| 10. | மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு ஏற்பாடுகள் | 35 |
| 11. | அலுவலக நடைமுறைகள் | 36 |
| 12. | ஊதியம் வழங்குதல் | 36 |
| 13. | பணித்தள பொறுப்பாளர்கள் செய்யக் கூடாதவை | 38 |

# 1. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்

- கிராமப்புறங்களில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் பொருட்டு வேலை வாய்ப்பை நல்கும் இத்திட்டம் 02.02.2006 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- தமிழ்நாட்டில் முதல் கட்டமாக 2006ல் ஆறு மாவட்டங்களில் (விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், திருவண்ணாமலை, திண்டுக்கல் மற்றும் சிவகங்கை) செயல்படுத்தப்பட்டது. 2007ல் இரண்டாம் கட்டமாக நான்கு மாவட்டங்களில் (திருநெல்வேலி, தஞ்சாவூர், திருவாரூர், கரூர்) செயல்படுத்தப்பட்டது. 1.04.2008 முதல் தமிழ்நாட்டில் மீதமுள்ள அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



**நோக்கங்கள்**

1. கிராமப்புறங்களில் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் குறைந்தது 100 நாட்களுக்கு குறையாமல் சாதாரண உடல் உழைப்பு தேவைப்படும் வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தல்.

2. கிராமப்புறங்களில் வாழும் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.

3. நிலைத்து நிற்க கூடிய சொத்துக்களை உருவாக்குதல்.

4. உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.

## பயன் பெறுவோர்

- கிராமப்புறங்களில் வாழும் குடும்பங்களைச் சார்ந்த 18 வயது நிரம்பிய சாதாரண உடலுழைப்பு மேற்கொள்ள விருப்பம் உள்ளவர்கள் அனைவரும் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறலாம்.

## பணி மேற்கொள்ளப்படும் இடம்

- வேலை வேண்டுவோரின் இருப்பிடத்திலிருந்து சொந்த கிராமத்தில் 2 கி.மீ. சுற்றளவுக்குள் வேலை கொடுக்கப்படும்.

## மேற்கொள்ளப்படும் பணிகள்

- மனித உழைப்பைச் சார்ந்த சமுதாய சொத்துக்களை உருவாக்கக்கூடிய பணிகள் .
- நிலம் மற்றும் நீர்வள பாதுகாப்பு பணிகள்.
- இணைப்பு சாலைகள் அமைத்தல்.
- தூய்மை பாரத இயக்கத்துடன் இணைந்து தனி நபர் இல்லக் கழிப்பறை கட்டுதல்.
- தனி நபர் நில மேம்பாட்டு திட்டங்கள் (பண்ணைக் குட்டை அமைத்தல், நிலம் சமன் செய்தல் போன்றவை)
- ஏரி, குளங்களில் கருவேல மரங்கள் நடுதல். ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய பொது இடங்கள் மற்றும் சாலை ஓரங்களில் மரக்கன்றுகள் நடுதல்.
- மற்றும் அரசால் அவ்வப்பொழுது அறிவிக்கப்படும் இதர பணிகள்.

## திட்ட நிதி ஒதுக்கீடு:

இத்திட்டத்திற்கு ஆகும் செலவினம் மத்திய மற்றும் மாநில அரசுகளால் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

## இத்திட்டத்தின் சிறப்பம்சங்கள்:

- தமிழகத்தைப் பொறுத்தவரை ஒரு நபருக்கு நாளொன்றுக்கு எட்டு மணிநேரம் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அளவுக்கு வேலை செய்தால் ரூ.148/– வரை ஊதியமாக பெறமுடியும்.
- ஆண்கள் மற்றும் பெண்களுக்குச் சம அளவிலான ஊதியம் வழங்கப்படும்.

- வாரம் தோறும் ஊதியம் வழங்கப்படுதல் வேண்டும். 15 நாட்களுக்குள் ஊதியம் வழங்கப்படுதல் உறுதி செய்யப்பட வேண்டும்.
- வழிகாட்டி நெறிமுறைகளின்படி, கிராமத்திற்கான திட்டத் தொகுப்பினை, கிராம சபை ஒப்புதல் அளித்தபின், கிராம ஊராட்சியின் மூலம் அனைத்து பணிகளும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- இத்திட்டத்தில் ஒப்பந்தக்காரர்கள் மற்றும் இயந்திரங்கள் பயன்படுத்துதல் கண்டிப்பாக தடைசெய்யப்பட்டுள்ளது.
- வேலையின் போது காயமுறும் நபர்களுக்கு இலவச மருத்துவ வசதி மற்றும் 50 சதவீதம் தினப்படி மற்றும் பணித்தளத்தில் உயிரிழப்பு ஏற்பட்டால் ரூ.25000/– அரசின் கருணைத் தொகை வழங்கப்படும்.
- ஒவ்வொரு ஊராட்சிகளும் தொகுப்புகளாக ( Cluster) பிரிக்கப்பட்டு, பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் வேலை உறுதி திட்ட தொழிலாளர்களுக்கு அவர்களின் குடியிருப்புக்கு அருகிலேயே வேலை வழங்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் சமூகத் தணிக்கையினை, கிராம சபை, அதற்காக அமைக்கப்பட்டுள்ள “சமூகத் தணிக்கையாளர்கள்” மூலம் மேற்கொள்ளும்.
- இத்திட்டத்தின் கீழ் குறைகளைத் துரிதமாகத் தீர்க்கும் வகையில், குறை தீர்க்கும் அமைப்பு (OMBUDSMAN) ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இதற்குஎன கட்டணம் இல்லாத் தொலைபேசி சேவை “1299” ( Toll free Helpline “1299”) ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்படுகிறது.
- இத்திட்டச் செயல்பாடு குறித்து அறிவுரைகள் வழங்கிடவும், கண்காணிக்கவும் மற்றும் மதிப்பீடு செய்யவும், “ தமிழ்நாடு அரசு மாநில வேலை உறுதி மன்றம்” என்ற அமைப்பு தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின் பிரிவு 12–ன்படி அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.
- இத்திட்டமானது மாநில அளவிலிருந்து ஊராட்சி வரை கீழ்கண்டவாறு செயல்படுத்தப்படுகிறது.

## 2. பணித்தள பொறுப்பாளர்களின் கடமையும், பொறுப்புகளும்

கிராம ஊராட்சிகளில் மேற்கொள்ளப்படும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டப் பணிகள் ஒவ்வொன்றும் பணித்தள பொறுப்பாளர்களால் நிர்வகிக்கப்பட வேண்டும் என ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சுற்றறிக்கை மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அவர்களுக்கு என கடமையும் பொறுப்புகளும் பல்வேறு அறிவுரைகள் மற்றும் வழிகாட்டி நெறிமுறைகள் வாயிலாக அவ்வப்பொழுது வழங்கப்பட்டு வருகிறது.

ஒரு ஊராட்சியில் பணி துவங்கப்படும் வாரத்தின் முதல் நாளிலிருந்து அந்த வாரப் பணிக்கான ஊதியம் வழங்கப்படும் வரை அனைத்து நிலைகளிலும் பணித்தளப் பொறுப்பாளரின் பணியானது மிகவும் இன்றியமையாதது. பணித்தளத்தில் வருகை பதிவேடு பராமரித்தல், தொழிலாளர்களுக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தருதல், தொழிலாளர்கள் தங்களது ஒருநாள் ஊதியமான ரூ.148/– ஐ முழுமையாக பெறுவதற்கு உரிய கண்காணிப்பு மற்றும் தொழில்நுட்ப உதவியினை வழங்குதல் போன்றவை இவர்களின் தலையாய கடமைகளாகும்.

### வருகை பதிவு மற்றும் பதிவேடுகள் பராமரித்தல்

- மேற்கொள்ளப்படும் பணிக்கு உண்டான நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளதா என கவனிக்க வேண்டும். மேலும் நடைபெற்று வரும் பணியானது நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்குள் மேற்கொள்ளப்படுகிறது என்பதை பணித்தள பொறுப்பாளர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

- தேவையான எண்ணிக்கையில் வருகைப் பதிவேடு தாட்கள் (NMR Sheets) பணித் தளத்தில் வைத்திருக்க வேண்டும்.

- வருகைப் பதிவேட்டின் பக்கங்களில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் கையொப்பம் உள்ளதை உறுதி செய்துகொள்ள வேண்டும்.

- பணித்தளத்தில் வேலை அடையாள அட்டை உள்ள பணியாளர்களை மட்டுமே பணி செய்ய அனுமதிக்க வேண்டும்.



மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம்-2005

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்-தமிழ்நாடு

தினசரி வருகைப் பட்டியல்களின் தொகுப்பு

தஞ்சாவூர் மாவட்டம்

ஊராட்சி ஒன்றியம் : தஞ்சாவூர்

ஊராட்சி : புதுப்பட்டினம்

தொகுப்பு :

வேலையின் பெயர் : பண்ணைக் குட்டை அமைத்தல்

பயனாளி பெயர்

நாகேந்திரன் த/பெ. தங்கவேல்

கோரிகுளம்

நில மேம்பாட்டு பணியாக இருப்பின் விவசாயின் பெயர் :

வகைப்பாடு : ஆ.தி | ப.கு | சிறு | குறு

நிலத்தின் மொத்த பரப்பளவு : 1.28 ஏக்கர்

மதிப்பீடு ரூ. : 0.52 இலட்சம்

நிர்வாக அனுமதி எண் : 2050/2013/அ12 நாள்: 05.07.2013

Block Development Officer (V.P.)

THANJAVUR.

பயன்படுத்தப்பட்ட வருகைப்பட்டியல்களின் தொடர் எண்கள் : 75674 முதல் 75675 வரை

வேலை செய்த மொத்த நாட்கள் : 22.08.13 முதல் 28-08-13 வரை (5) நாட்கள்

- வாரத்தின் பணி துவங்கும் முதல் நாள் (பிரதி வியாழன்) அன்று பணி துவங்குவதற்கு ஒரு மணிநேரம் முன்னதாக பணித்தளத்திற்கு வருதல் வேண்டும். மேலும் அன்று வருகைப் பதிவேட்டில் தொழிலாளர்களின் பெயர் மற்றும் கூடுதல் விவரங்களை எழுதி கையொப்பம் பெற வேண்டியதாலும், மற்றும் அவர்களை இருபது நபர் கொண்ட குழுக்களாக பிரித்து முன் அளவீடு செய்து வேலை அமர்த்த வேண்டியதாலும் பணித்தள பொறுப்பாளர் முன்னதாக வரவேண்டியது அவசியமாகிறது. மேலும் மேற்கூறிய காரணங்களுக்காக தொழிலாளர்களையும் முன்னதாக வரவழைக்க வேண்டியது அவர்களின் பொறுப்பாகும்.

- வாரத்தின் முதல் நாளில் வருகை புரிந்துள்ள தொழிலாளர்களை 20 பேர் கொண்ட குழுக்களாக பிரிக்கும்போது ஒவ்வொரு குழுவிலும் சம அளவில் முதியவர்கள் மற்றும் இளைஞர்கள் பங்குபெறும்படி கவனத்துடன் பார்த்துக்கொள்ள வேண்டும்.



- உதாரணமாக வாரத்தின் முதல் நாளில் 88 தொழிலாளர்கள் வருகை புரிந்திருக்கும் பட்சத்தில் அவர்களை நான்கு குழுக்களில் 20 நபர்கள் கொண்ட முழுமையான குழுக்களாகவும், மீதமுள்ள 8 நபர்களை தனிக்குழுவாகவும் பிரித்து பணியில் அமர்த்தப்பட வேண்டும். அடுத்த நாள் புதிதாக சில தொழிலாளர்கள் வருகைபுரியும் பட்சத்தில் அவர்களை முந்தைய நாளில் பிரிக்கப்பட்ட சிறிய குழுவோடு சேர்த்து பணியில் அமர்த்தப்பட வேண்டும்.

- தொழிலாளர்கள் நாள் ஒன்றுக்கு உணவு இடைவேளையான ஒருமணிநேரம் உள்பட ஒன்பது மணிநேரம் வேலை செய்வதை கண்காணித்து உறுதி செய்ய வேண்டும்.

- ஊராட்சி செயலரிடமிருந்து குடும்ப வாரியாக வேலை வழங்கப்பட்ட பதிவேட்டு விபரங்களின் (Register No.3) சுருக்கத்தினை பிரதி மாதம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

- அதனடிப்படையில் ஒரு குடும்பத்திற்கு நூறு நாட்களுக்கு மிகாமல் வேலை வழங்குவதை கண்காணித்து உறுதி செய்வது பணித்தள பொறுப்பாளரின் முக்கிய பொறுப்பாகும்.

- வருகை பதிவேட்டு தாட்கள் (NMR Sheets) தொடர் எண் விடுபடாமல் உள்ளதை உறுதி செய்த பின்னரே பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

- தினசரி காலை 9.00 மணிக்குள் வருகைப் பதிவேட்டில் (NMR) தொழிலாளர்களின் கையொப்பம் பெறப்படுவதை பணித்தள பொறுப்பாளர் உறுதி செய்ய வேண்டும்.



- வாரத்தின் இடைப்பட்ட நாட்களில் தொழிலாளர் எவரேனும் பணிக்கு வரவில்லையெனில் வருகைப் பதிவேட்டில் அந்த நபருக்குரிய கலத்தில் வரவில்லை என்பதன் அடையாளமாக X குறி இடப்பட வேண்டும்.

- வருகை பதிவேட்டில் அடித்தல், திருத்தம், மற்றும் எழுத்தின் மேல் திருத்தம் (Over Writing) இல்லாமல் பராமரிப்பது பணித்தள பொறுப்பாளரின் பொறுப்பாகும்.


- தினசரி வருகை பதிவேட்டில் கடைசி பதிவின்கீழ் ஆண், பெண், மாற்றுத்திறனாளிகள் மற்றும் மொத்தம் ஆகியவற்றின் எண்ணிக்கையை எழுதி கையொப்பமிட வேண்டும்.


- வருகை புரிந்துள்ள தொழிலாளர்களின் வேலை அட்டையினை அவர்களிடமிருந்து பெற்று அட்டையின் முகப்பில் கேட்கப்பட்டுள்ள விபரங்கள் மற்றும் கையொப்பங்கள் முழுமையான அளவில் நிரப்பப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும்.

- வருகை புரிந்துள்ள தொழிலாளர்களின் வேலை அட்டை அவர்களுடையதுதானா என்பதை பரிசோதித்தறிந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

- ஒரு குடும்பத்தில் ஒரு நபரின் வேலை அட்டையினை வைத்துக்கொண்டு மற்றொருவர் பணிபுரிய அனுமதிக்கக் கூடாது. அதேபோல் 100 நாள் வேலை பூர்த்தி அடைந்த குடும்பத்தை சேர்ந்த ஒரு நபர், 100 நாள் பூர்த்தியடையாத குடும்பத்தினரின் வேலை அட்டையுடன் வேலைக்கு வரும் பட்சத்தில் அவரை பணிபுரிய அனுமதிக்கக் கூடாது.

- தினசரி வருகை புரியும் தொழிலாளர்களின் வேலை அட்டையில் அதற்குரிய தேதியிட்ட கட்டத்தில் வேலைக்கு வந்துள்ளதை உறுதி செய்யும் வகையில் காலையில் ‘ / ‘ என்ற குறுக்குக்கோடும், மாலையில் பணி முடியும்போதும் அவர்கள் முழுமையாக பணித்தளத்தில் இருந்ததை உறுதி செய்யும் வகையில் ‘ \ ‘ மற்றொரு குறுக்குக்கோடும் பதிவு செய்து x ‘ வருமாறு பூர்த்தி செய்யப்பட வேண்டும்.






நாள் வாரியான வருகைப் பதிவு 2013 - 2014

| வ. எண். | மாதம் | வேலை செய்த மொத்த நாட்கள் |
|---|---|---|
| 1 | ஏப்ரல் | 9 |
| 2 | மே | 20 |
| 3 | ஜூன் | 19 |
| 4 | ஜூலை | 20 |
| 5 | ஆகஸ்ட் | 6 |
| 6 | செப்டம்பர் | |
| 7 | அக்டோபர் | |
| 8 | நவம்பர் | |
| 9 | டிசம்பர் | |
| 10 | ஜனவரி | |
| 11 | பிப்ரவரி | |
| 12 | மார்ச் | |

- பிரதி வாரம் ஊதியம் வழங்கிய விபரங்களை வேலை அட்டையில் வலப்புறத்தில் உள்ள கலங்களில் முறையாக பூர்த்தி செய்து ஊராட்சி மன்ற தலைவரின் கையொப்பம் பெறப்பட வேண்டும்.



ஊதியம் வழங்கிய விவரம் 2013 - 2014

| வார ஊதிய விவரம் - I: வாரம் ..... முதல் ..... வரை | வே.செ.மொ.நா. | ஊ.வ. நாள் | தொகை ரூ. | கையொ |
|---|---|---|---|---|
| 21.3.13 – 27.3.13 | 5 | 2/4/13 | 500 | [signature] |
| — | | | | |
| 23.5.13 – 29.5.13 | 5 | 4/6/13 | 550 | [signature] |
| 27.6.13 – 3.7.13 | 5 | 9/7/13 | 560 | [signature] |
| 25.7.13 – 31.7.13 | 4 | 6/8/13 | 400 | [signature] |

| வார ஊதிய விவரம் - II: வாரம் ..... முதல் ..... வரை | வே.செ.மொ.நா. | ஊ.வ. நாள் | தொகை ரூ. | கையொ |
|---|---|---|---|---|
| 2.4.13 – 5.4.13 | 3 | 23/4/13 | 330 | [signature] |
| 7.5.13 – 8.5.13 | 2 | 15/5/13 | 220 | [signature] |
| 30.5.13 – 5.6.13 | 6 | 11/6/13 | 660 | [signature] |
| 4.7.13 – 10.7.13 | 4 | 16/7/13 | 400 | [signature] |
| — | | | | |

| வார ஊதிய விவரம் - III: வாரம் ..... முதல் ..... வரை | வே.செ.மொ.நா. | ஊ.வ. நாள் | தொகை ரூ. | கையொ |
|---|---|---|---|---|
| 4.4.13 – 10.4.13 | 6 | 23/4/13 | 660 | [signature] |
| 9.5.13 – 15.5.13 | 6 | 27/5/13 | 660 | [signature] |
| 6.6.13 – 12.6.13 | 3 | 18/6/13 | 330 | [signature] |
| 11.7.13 – 17.7.13 | 5 | 23/7/13 | 500 | [signature] |
| — | | | | |

| வார ஊதிய விவரம் - IV: வாரம் ..... முதல் ..... வரை | வே.செ.மொ.நா. | ஊ.வ. நாள் | தொகை ரூ. | கையொ |
|---|---|---|---|---|
| — | | | | |
| 16.5.13 – 22.5.13 | 5 | 29/5/13 | 550 | [signature] |
| 13.6.13 – 19.6.13 | 4 | 25/6/13 | 440 | [signature] |
| 18.7.13 – 24.7.13 | 5 | 30/7/13 | 500 | [signature] |
| 22.8.13 – 28.8.13 | 5 | 3/9/13 | 600 | [signature] |

| வார ஊதிய விவரம் - V: வாரம் ..... முதல் ..... வரை | வே.செ.மொ.நா. | ஊ.வ. நாள் | தொகை ரூ. | கையொ |
|---|---|---|---|---|
| — | | | | |
| — | | | | |
| 20.6.13 – 26.6.13 | 5 | 2/7/13 | 500 | [signature] |

வே.செ.மொ.நா. - வேலை செய்த மொத்த நாட்கள் 9 ஊ.வ.நாள்-ஊதியம் வழங்கிய நாள், கையொ-ஊராட்சித்தலைவர் கையொப்பம்

- ஒரே நபரின் வேலை அட்டையின் முகப்பில் கையொப்பமும், வருகைப் பதிவேட்டில் அவருடைய இடதுகை பெருவிரல் ரேகையும் மாற்றி பெறுதல் கூடாது.
- தொழிலாளர்கள் பணிக்கு வராத நாட்களில் அவர்களின் வேலை அட்டையில் உரிய நாள் கலத்தில் a ‘ எனக் குறியிடப்பட வேண்டும்.
- தற்போது நடைபெற்று வரும் பணி முழுமையாக முடிவடையும் முன்பு அடுத்தடுத்த வாரங்களுக்கு தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வேலை வழங்கிட தேவையான மதிப்பீடுகளை உரிய அனுமதி பெற்று தயார் நிலையில் உள்ளதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.
- ஒவ்வொரு நாளும் பணி முடிவுற்றவுடன் தொழிலாளர்களின் வேலை அட்டைகள் அனைத்தையும் அவர்களிடம் கட்டாயம் திரும்ப கொடுக்கப்பட வேண்டும். பணித்தள பொறுப்பாளர்கள் பிற தொழிலாளர்களின் வேலை அட்டையினை வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.
- தினசரி தொழிலாளர் வருகை விபரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு குறுஞ் செய்தி (SMS) மூலம் தெரிவித்தப் பின்னர் தகவல் பலகையில் இவ்விபரம் பதிவு செய்யப்பட வேண்டும்.
- பணி முடிவுற்ற உடன் வருகை பதிவேட்டில் அனைத்து பதிவுகளையும் முழுமையாக பூர்த்தி செய்து வார இறுதி நாளில் ஊராட்சி செயலர் வழியாக வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) இடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

## 3. வேலைத்தளத்தில் அடிப்படை வசதிகள்

- பணித்தளத்தில் உரிய வரையறைகளின் படி முழுமையான தகவல்களுடன் கூடிய தகவல் பலகை வைக்கப்பட வேண்டும்.







- சிறுபாசன ஏரிகள் தூர்வாருதல் மற்றும் புதிய குளங்கள் வெட்டுதல் போன்ற நீண்ட நாட்கள் தொடர்ந்து நடைபெறும் பணிகளுக்கு நிரந்தரமான நிழல் வசதியும், பாசன வாய்க்கால் தூர்வாருதல் மற்றும் சாலை மேம்பாடு செய்தல் போன்ற பணிகளுக்கு தற்காலிக நிழல் வசதியும் அமைத்து தரப்பட வேண்டும்.

- தொழிலாளர்களுக்கு தட்டுப்பாடின்றி சுத்தமான குடி தண்ணீர் வசதி செய்து தரப்பட வேண்டும்.





- தொழிலாளர்களுக்கு அவசர காலத்தில் உதவும் வண்ணம் முதலுதவி பெட்டி பணித் தளத்தில் வைத்திருத்தல் வேண்டும். மேலும் முதலுதவி பெட்டியிலுள்ள மருந்துகளை ஐயமின்றி எடுத்து வழங்கும் வகையில் மருந்துகளின் பெயர், அதன் தன்மை மற்றும் அவற்றின் காலாவதியாகும் தேதியினை பணித்தள பொறுப்பாளர் அறிந்து வைத்திருக்க வேண்டும்.



- அவசரகால சிகிச்சை குறித்த முதலுதவி ஏற்பாடுகளை பணித்தளப் பொறுப்பாளர்கள் ஓரளவு தெரிந்து வைத்திருத்தல் அவசியம் ஆகும். உதாரணமாக விஷ ஜந்துக்கள் கடித்தல், கை, கால் எலும்பு முறிவு, வெட்டுக்காயங்கள், தீப்புண்கள், வாந்திபேதி, மயக்கம் மற்றும் மாரடைப்பு போன்ற வியாதிகளுக்கு முதலுதவி ஏற்பாடுகளை தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

- பணித்தளத்தில் கைக்குழந்தைகளுடன் வருகை புரிந்துள்ள தாய்மார்களின் நலன்கருதி தற்காலிக குழந்தைகள் காப்பகம் அமைத்துத்தர வேண்டும். இவ்வாறு அமைக்கப்படும் குழந்தைகள் காப்பகத்தில் மாற்றுத் திறனாளிகள் மூலம் குழந்தைகளை பராமரித்துக்கொள்ள அனுமதிக்கலாம்.






## 4. முன் அளவீடு (Pre Marking) செய்யப்பட வேண்டியதின் அவசியம்

இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பெரும்பாலான பணிகள் மண்வேலை தொடர்பான பணிகளாகும். ஏரிகள் மற்றும் சிறுபாசன குளங்கள் தூர்வாருதல், புதிய பண்ணைக் குட்டைகள் அமைத்தல் மற்றும் சாலைகள் மேம்பாடு செய்தல் போன்ற பணிகளில் பல்வேறு வகையான அளவுகள், ஊரக விலைப் பட்டியல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தொழிலாளர்களின் தினசரி ஊதியம் நிர்ணயிக்கப்படுகிறது. ஆகவே ஊரக பகுதிகளில் உள்ள தொழிலாளர்கள் முழு அளவு ஊதியமாக ரூ.148/– ஐ பெறும் வகையில் மண்ணின் தன்மை, வெட்டப்பட்ட மண்ணை கொண்டு சென்று கொட்டப்பட வேண்டிய இடத்தின் தூரம் (Lead) மற்றும் உயரம் (Lift) ஆகியவற்றினை கணக்கில் கொண்டு முன் அளவீடு செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகிறது.





- பணித்தளத்தில் முன் அளவீடு செய்வதற்கு தேவையான உடன் கணிப்பு சுவடி, Calculator, Measuring Tape, கம்பித் துண்டுகள், நூல் கயிறுகள், சுத்தியல் மற்றும் சுண்ணாம்புத் தூள் போன்றவை தேவையான அளவு இருப்பில் வைத்துக்கொள்ள வேண்டும்.

- பிரதி வாரம் புதன்கிழமை பிற்பகல் மற்றும் வியாழக்கிழமை முற்பகலில் ஒன்றிய பணி மேற்பார்வையாளர் கடந்த வாரம் முடிக்கப்பட்ட பணிகளின் அளவுகளை குழு வாரியாக அளவீடு செய்து முடித்தபின் தொடர்ந்து அடுத்த வாரம் செய்ய வேண்டிய பணிகளுக்கான 6 நாட்களுக்கு உரிய முன் அளவீடு (Pre marking) செய்து கொடுப்பார்.

- குழுக்களில் உள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கைக்கேற்பவும் பணித்தளத்தின் தன்மைக்கேற்பவும் ஏரி, குளம் வேலைகளைக்கு ஆறு நாட்களுக்கும் சாலை அகலப்படுத்துதல், புதிய சாலைகள் அமைத்தல் மற்றும்

கால்வாய்கள் தூர்வாரும் பணிகளுக்கு இரண்டு அல்லது ஒரு நபருக்கு தினசரியும் முன் அளவீடு செய்து கொடுக்க வேண்டும்.






- பணித்தள பொறுப்பாளர்கள் உடன் கணிப்பு சுவடியில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளைக் கொண்டு ஒரு நபர் முதல் 20 நபர்களுக்கு ஒருநாள் முதல் ஆறு நாட்கள் வரையிலான பணிக்கு முன் அளவீடு செய்து கொடுக்கும் அளவுக்கு வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்கள் ஆகியோர்களிடம் தெளிவுப்படுத்திக் கொள்ளவேண்டும்.

- ஏரி மற்றும் சிறு பாசன குளங்கள் ஆழப்படுத்தி கரைகளை பலப்படுத்தும் பணிகளாக இருப்பின் கரையின் உட்புறத்திலிருந்து சுமார் 10 மீட்டர் இடைவெளி விட்டும், சிறு குளங்களாக இருப்பின் 5 மீட்டர் வரை இடைவெளி விட்டும் கரைகள் பாதிக்கப்படாதவாறு மண் எடுக்க வேண்டிய குழிகள் வரைந்து கொடுக்கலாம்.

- ஏரி மற்றும் சிறு பாசன குளங்களின் கரைகள் பலப்படுத்தும் பணிகள் துவங்குவதற்கு முன்னர் முறைப்படி முட்புதர்கள் அகற்றியும், புதிதாக கொட்டப்படும் மண் சரிந்துவருவதை தடுப்பதற்கும் உறுதியான கரைகள் அமைப்பதற்கு ஏதுவான வகையில் படிக்கட்டுகள் (Benching) வெட்டப்பட வேண்டும்.



- புதர்கள் அகற்றும் பணிகளுக்கு முன் வரைவு செய்யும்போது சாதாரண வகையாக இருப்பின் தரைமட்டத்திற்கு மேல் அறுத்து எடுப்பதற்கும், முட்புதர்களாக இருப்பின் அடியோடு அகற்றவும் முன் அளவீடு செய்து தரப்பட வேண்டும்.

- மண் வேலையின் திறன் பாதிக்காத வகையில் ஒன்று அல்லது இரண்டு குழுக்கள் புதர்கள் அகற்றும் பணியினை முதற்கட்டமாக மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

- புதர்கள் அகற்றும் பணி மேற்கொள்ள நியமிக்கப்பட்டுள்ள தொழிலாளர்கள் அதற்கென உரிய அரிவாள்கள், வேருடன் பறித்தெடுக்க வேண்டிய பிக்காசு மற்றும் கோடாரிகள் போன்ற கருவிகளுடன் வந்துள்ளதை பணித்தள பொறுப்பாளர்கள் உறுதி செய்ய வேண்டும்.


- பாசன வாய்கால்கள் தூர்வாரும் பணிகளில் நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு வெட்ட வேண்டிய குழியின் அளவை முன் அளவீடு செய்யும்போது முழுமையாக வரைந்து கொடுக்கப்பட வேண்டும். உதாரணமாக கடின மண்ணில் பாசன வாய்கால் ஒரு அடி ஆழத்திற்கு தூர்வாரும் பணியில் 20 நபர்கள் கொண்ட குழுவிற்கு நாள் ஒன்றுக்கு 80 மீட்டர் நீளம் 1 மீட்டர் அகலத்திற்கு மண்ணை வெட்டியெடுக்க வேண்டும். அதாவது நபர் ஒன்றுக்கு சுமார் 4 மீட்டர் நீளம் ஒதுக்கப்பட வேண்டும்.

- அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லையெனில், அகலம் குறைவாக உள்ள தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படும் இடங்களில் உரிய அளவீட்டுடன் பணி மேற்கொள்ள முடியாமல் அனைத்து தொழிலாளர்களுக்கும் இடநெரிசல் ஏற்பட்டு வேலை செய்ய முடியாத நிலையும் வேலைத் திறனும் பாதிக்கப்படும்.





- மண்ணை வெட்டி எடுப்பதற்கு முன் அளவீடு எவ்வளவு அவசியமோ அந்த அளவு அவசியமானது வெட்டி எடுத்த மண்ணை கரை பகுதிகளில் கரையின் மாதிரி வடிவமைப்பிற்கேற்ற வகையில் அமையும்படி மண்ணை கொட்ட வைப்பதாகும்..




- தொழிலாளர்கள் தங்களது ஒருநாள் ஊதியமான ரூ.148/– ஐ முழுமையாக பெற, செய்ய வேண்டிய வேலையின் அளவை விளக்கும் மாதிரி குழி பணித்தளத்தில் வெட்டப்பட்டிருக்க வேண்டும்.





# 5. பணிகளின் வகைப்பாடுகள் மற்றும் தொழில்நுட்ப குறிப்புகள்

## ஏரிகள், சிறுபாசன குளங்கள் மற்றும் குளங்கள் தூர்வாரி ஆழப்படுத்துதல்

- மண் வேலை துவங்கப்படுவதற்கு முன்பாக ஏரியின் கரையின் மேற்பரப்பில் உள்ள புதர்களை அழித்து அப்புறப்படுத்தும் பணியினை மேற்கொள்ள வேண்டும்.


- கரையின் மேற்பரப்பில் புதிதாக மண் நிரப்பி பலப்படுத்துவதற்கு ஏதுவாக படிக்கட்டுகள் (Benching)அமைக்கப்பட வேண்டும்.

- ஏரி மற்றும் சிறு பாசன குளங்களின் உட்பகுதிகளில் கரையின் அடிப்பகுதியிலிருந்து 10 மீ இடைவெளி விட்டு மண் வெட்டுவதற்கான குழிகளுக்கு முன் அளவீடுகள் வரைவு செய்யப்பட வேண்டும்.

- குளங்கள், ஊரணிகள் மற்றும் பண்ணைக் குட்டைகளின் உட்பகுதிகளில் கரையின் அடிப்பகுதியிலிருந்து நீர்நிலையின் பரப்பினை பொறுத்து சுமார் 1 மீ அளவிலிருந்து 5 மீ வரை இடைவெளி விட்டு மண் வெட்டுவதற்கான குழிகளுக்கு முன் அளவீடுகள் வரைவு செய்யப்பட வேண்டும்.

- முன் அளவீட்டிற்கான குழியின் நீளம், அகலம் மற்றும் ஆழம் ஆகியவை கணக்கிடும் போது உரிய சுமக்கின்ற தூரம் லீட் (LEAD) மற்றும் தூக்குகின்ற உயரம் லிப்ட் (LIFT) ஆகியவற்றை கணக்கில் கொள்ள வேண்டும்.

LEAD & LIFT **கணக்கிடும் முறை**



- கரையின் மையத்திலிருந்து வெட்டப்படவேண்டிய குழியின் மையம் வரையிலான சுமக்கின்ற தூரம் 10 மீட்டருக்கு மேல் கூடுதல் ஆகும் போதும் மற்றும் கரையின் மையத்திலிருந்து வெட்டப்படவேண்டிய குழியின் மையம் வரையிலான தூக்குகின்ற உயரம் 2 மீட்டருக்கு மேல் கூடுதல் ஆகும் போதும் கூடுதலாக ஒரு லீட் மற்றும் ஒரு லிப்ட்க்கான தொகையினை கணக்கில் கொண்டு முன் அளவீடுகள் வழங்கப்பட வேண்டும்.
- இவ்வாறு ஒவ்வொரு கூடுதல் 10 மீட்டர் சமதள தூரத்திற்கும் ஒவ்வொரு கூடுதல் ஒரு மீட்டர் செங்குத்தான உயரத்திற்கும், ஒவ்வொரு கூடுதல் லீட் மற்றும் லிப்டினைக் கணக்கில் கொண்டு முன் அளவுகள் வழங்கப்பட வேண்டும். (Initial lead = 10m, Initial Lift = 2m ; For every additional Horizontal distance 10m = **1 extra lead** and for every additional vertical distance 1m = **1 extra lift**)
- உடன்கணிப்புச் சுவடியில் இதற்கான முன் அளவீடுகள் அனைத்தும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- ஒரு வாரத்திற்கான முன் அளவீடுகள் மேற்கொள்ளும்போது குறைந்தபட்ச ஆழம் 1 மீட்டர் இருக்கும் வண்ணம் ஒவ்வொரு குழுக்களுக்கும் முன் அளவீடுகள் வழங்குதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் 1 மீட்டருக்கு குறைவான ஆழத்தினை கணக்கீடு செய்து முன் அளவீடுகள் வழங்குதல் கூடாது.
- ஏரி, குளங்களில் வெட்டப்படும் மண்ணை உட்புறம் கொட்டாமல் கரையின் மேற்புறமும், வெளிபுறமும் கொட்டி தினசரி சமன் செய்ய வேண்டும். கரையின் மேற்புர அகலம் 2.0 மீட்டருக்கு குறையாமல் இருக்க வேண்டும்.
- குளம் மற்றும் ஏரிகளை ஆழப்படுத்தும் போது தோண்டி எடுக்கப்படும் மண்ணை பாதுகாப்பாக கரை மீதும் மற்றும் கரையின் வெளிப்புறம் கொட்டுவதற்கு ஏதுவாக கரையின் உட்புறம் படிகள் அமைக்கப்படவேண்டும்.
- மண்கட்டிகள் ஏதும் இருப்பின் அவற்றை உடைத்து சரியாக சமப்படுத்த வேண்டும்.



- திம்சு அல்லது கைப்பிடிகளுடன் கூடிய கனமான இரும்பு பிளேட்டுகளை கொண்டு அழுத்தம் கொடுத்து சமப்படுத்துதல் வேண்டும்.
- கரைகளை பலப்படுத்துபோது கரைகளில் மண் கொட்டி, சமன்படுத்தி, அழுத்தம் கொடுத்து, படத்தில் உள்ளவாறு பக்கவாட்டு சரிவு சரியாக உள்ளவாறு அமைக்கவேண்டும்.

**குளம் தூர் வாரும்போது கவனத்தில் கொள்ளவேண்டியவை**

- வரத்துக் கால்வாய் பணிகளுக்கு முதலில் வருவாய் துறையிலிருந்து ஒவ்வொரு வரத்துக்கால்வாய்களுக்கும் வருவாய்த்துறை வரைபடங்கள் மற்றும் ஆவணங்களை (FMB & ‘A’ Register) கேட்டுப்பெற்று அதிலுள்ள அளவிற்கு மண் வேலைகள் செய்யப்பட வேண்டும்.
- வரத்துக்கால்வாய்கள் தூர்வாரப்படும் பகுதி டிரப்பிசாய்டு (Trapezoid) வடிவத்தில் பக்கவாட்ட சாய்தளம் 1 : 1 என்ற விகிதாச்சாரத்தில் இருக்கும் வண்ணம் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட வேண்டும்.
- வரத்துக்கால்வாய்களின் ஆழம் முறையாக கணக்கில் கொண்டு நீரோட்டத்திற்கு ஏதுவாக கீழ்மட்டம் அமைக்கப்பட வேண்டும் (Gradient).

- வரத்துகால்வாய்கள் தூர்வாரி ஆழப்படுத்தும் பணிகளில் வரத்துக்கால்வாய்களின் அகலத்திற்கேற்ப ஒவ்வொரு 100 மீட்டர் நீளத்திற்கும் ஒரு மூழ்கும் குழி (Sunken Pond), 10 மீட்டர் நீளத்திற்கு குறைந்தபட்சம் 1 அடி ஆழத்திற்கு அமைக்க வழிவகை செய்யப்பட வேண்டும்.

- அவ்வாறு அமைக்கப்படும் மூழ்கும் குழி, மழைக்காலத்தில் மணலால் நிரம்புவதை தவிர்க்க, வேலை தளத்தில் இருக்கும் கற்களைக் கொண்டு கருங்கற்கள் தடுப்பணைகள் ஒவ்வொரு மூழ்கும் குழிக்கு முன்னர் அமைத்தல் வேண்டும்.

- வரத்துக்கால்வாய், போக்குக்கால்வாய் மற்றும் பாசனக் கால்வாய்கள் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளும்போது அவைகளின் முழுமையான தூரத்திற்கும் இடையில் தடைப்படாமல் பணி நடைபெறுவதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

- உடன் கணிப்பு சுவடியில் கண்டுள்ளவாறு இப்பணிக்கான முன் அளவீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

- கால்வாய் கரையில் உள்ள முட்புதர்கள் மற்றும் செடிகள் அகற்றப்படவேண்டும். கால்வாயின் உட்பகுதியில் உள்ள முட்புதர்கள் அழிக்கப்பட்டு மண்ணைக் கொட்டி கரை அமைப்பதற்கு ஏதுவாக அகற்றப்படவேண்டும்.

- கரையின் வெளிப்புற பக்கத்தில் மண்ணை கொண்டுச் சென்று கொட்ட வேண்டும்.

- அளவீடு செய்யப்பட்ட பகுதியில் வரத்து கால்வாயின் நீர் வழித்தடம் பாதிக்காத வகையில் (வரத்து கால்வாயின் மையப் பகுதியில் நீர் தேங்கி நிற்காத வகையில்) மண்வேலை செய்ய வேண்டும்.

## 6. புதிய சாலை மற்றும் சாலை மேம்பாடு செய்தல்

- புதிய சாலைகள் அமைக்கும் பணிகளுக்கு முதலில் வருவாய் துறையிலிருந்து வரைபடங்கள் மற்றும் ஆவணங்களை (FMB & 'A' Register) கேட்டுப்பெற்று அதிலுள்ள அளவிற்கு ஏற்றவாறு சாலையின் அகலத்தினை அமைக்க வேண்டும்.
- புதிய சாலை அமைக்கும் பணிக்கு, சாலையின் மேல் அகலம் (Top width) மற்றும் தேவையான உயரத்தினை (height of embankment) கணக்கில் கொண்டு சாலையின் பக்கவாட்டு சாய்தளம் 1 : 1.5 என்ற விகிதாச்சாரத்தில் அமைத்தல் வேண்டும்.
- சாலை அமைக்க தேவையான மண்ணினை, சாலையின் கீழ் அகலத்தினை (Bottom of the embankment) கணக்கில் கொண்டு சாலையின் இருபுறமும் சிறிது இடைவெளி விட்டு (Bench) மழைநீர் கால்வாய்கள் வெட்டி எடுப்பதன்மூலம் கிடைக்கப்பெறும் மண்ணின் மூலம் சாலை அமைக்கப்பட வேண்டும்.
- கொட்டப்படும் மண், ஒவ்வொரு நாள் பணி முடிவுறும் வேலையில் மண்ணில் உள்ள கட்டி முட்டிகளை உடைத்து சமன்படுத்தி உரிய கேம்பரில் (Camber) அமைத்தல் வேண்டும்.
- சாலையின் இருபுறமும் மழைநீர் வழிந்தோட வசதியாக மழைநீர் வடிகால் வாய்க்கால் தொடர்ச்சியாக அமைத்திட வேண்டும்.




- மழைநீர் கால்வாய்களின் பக்கவாட்டு சாய்தளம் 1 : 1 என்ற விகிதாச்சாரத்தில் வெட்டி எடுக்கப்படல் வேண்டும்.
- மண்கட்டிகளை தூளாக்கி, திம்சு கொண்டு அழுத்தி சமன்படுத்துதல் வேண்டும்.
- சாலையின் புருவங்கள் (Berms) மேம்பாடு செய்யும் பணியாக இருப்பின், வெட்டி எடுத்து கொட்டப்படும் மண் தார்ச்சாலையை விட உயரமாக கொட்டப்படாமல், தார்ச்சாலையின் கேம்பரை கணக்கில் கொண்டு அதை விட சாலையின் புருவத்திற்கு கூடுதல் கேம்பர் அனுமதித்து மண்ணினைக் கொட்டி சமன்படுத்துதல் வேண்டும்.
- சாலையின் புருவங்கள் உயரமாக இருப்பின் தேவைக்கேற்ப மழைநீர் வடிக்க சிறு வடிகால்வாய்கள் சாலையின் புருவத்தில் அமைக்கப்படுதல் வேண்டும்.
- உடன் கணிப்பு சுவடியில் கண்டுள்ளவாறு இப்பணிக்கான முன் அளவீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.




## 7. பண்ணைக் குட்டைகள் அமைத்தல்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டம் விதி 27(1) லும், தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மக்கள், சிறு மற்றும் குறு விவசாயிகளின் நிலங்களை மேம்பாடு செய்யும் பணிகள் எடுத்துச்செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண். 61 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை (CGS-1) நாள் 23.07.2012–ல் நில மேம்பாடு செய்யும் பணிகளுக்கு வழிகாட்டி நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன.




TYPICAL CROSS SECTION OF A FARM POND OF SIZE 25m X 25m
(Average)

### நோக்கங்கள் :

- வறட்சிக் காலங்களில் விவசாய நிலங்களில் பயிர்களைக் காத்திட பயன்படுகிறது.
- கால்நடைகளின் சுகாதாரமான பராமரிப்பு மற்றும் அவற்றின் குடிநீர் உபயோகத்திற்கு பயன்படுகிறது.
- மழைநீர் விரயமாகாமல் நிலத்தடி நீர் சேமிக்கும் அமைப்பாக செயல்படுகிறது.
- உள்நாட்டு மீன்வளத்தைப் பெருக்குதல்.
- கடற்கரைப் பகுதிகளில் உப்பு நீர் நிலத்தடி நீருடன் கலந்து மாசுபடுவதைத் தடுக்கிறது.
- நிலத்தடி நீர் மட்டம் உயர்வதால் அருகிலுள்ள ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் திறந்தவெளிக் கிணறுகளின் நீர்மட்டம் உயர்கிறது.
- ஆதிதிராவிடர், பழங்குடியினர், சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு விவசாய வேலையில்லாத காலங்களில் மீன்வளர்ப்புத் தொழில் மூலம் இதர வருமானம் கிடைக்க வாய்ப்புள்ளது.

- ஆறு மற்றும் வடிகால்களில் நீர் மட்டம் குறையும் காலங்களில் இவ்வாறான நீர் நிலைகளில் ஆழமான பகுதிக்கு வருவதன் மூலம் மீன்கள் மடிவதைத் தவிர்க்க முடியும்.
- ஆதிதிராவிடர் மற்றும் சிறு / குறு விவசாயிகளின் நிலங்களில் உருவாக்கப்படும் சொத்துக்களால், பயனாளிகள் மற்றும் தொழிலாளர்களின் மனநிறைவு.

### பயனாளிகள் தேர்வு செய்தல் :

- ஆதிதிராவிடர், பழங்குடியினர், சிறு மற்றும் குறு விவசாயிகளின் நிலங்கள்.
- பயனாளிகளின் தேர்வு வழிகாட்டி நெறி முறைகளின்படி வருவாய்த்துறை மற்றும் வேளாண்மைத்துறை அலுவலர்களுடன் இணைந்து நில ஆவணங்களை சரிபார்த்து கிராம சபா ஒப்புதல் பெற்று தேர்வு செய்யப்படுகிறது. இவர்களில் ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.
- ஒன்றுக்கு மேற்பட்ட பயனாளிகள் தங்கள் நிலங்களில் பண்ணைக்குட்டைகள் வெட்டிக்கொள்ள முன்வரும் பட்சத்தில், முன்னுரிமை அடிப்படையில் நிரந்தர காத்திருப்போர் பட்டியல் தயார் செய்து அதன் அடிப்படையில் தொழிலாளர்களை பிரித்தனுப்பலாம்.

### நிலம் தேர்வு செய்தல் :

- ஒரு பயனாளியின் நிலத்தில் அதிக பட்சமாக ரூ.1.50 இலட்சம் வரை நிலமேம்பாடு பணிகள் மேற்கொள்ளலாம்.
- குறைந்த பட்சமாக 15 மீ X 25 மீ அளவில் நிலத்தின் அளவு மற்றும் வடிவத்திற்கேற்ப பண்ணைக் குட்டைகள் அமைக்கலாம்.
- அவ்வாறு 15 மீ X 15 மீ அளவுள்ள குட்டை அமைக்க சுமார் 25 மீ X 25 மீ அளவுள்ள நிலமும், 25 மீ X 25 மீ அளவுள்ள குட்டை அமைக்க சுமார் 35 மீ X35 மீ அளவுள்ள நிலமும் தேவைப்படும்.
- மேலும் குட்டை வெட்டும்போது, வெட்டி எடுக்கப்பட்ட மண்ணானது நாற்புறமும் கரை அமைக்கப்பட்டது போக உபரியாக வரும் பட்சத்தில் அவற்றை தாழ்வாக உள்ள நிலப்பரப்பில் நிரப்பலாம் அல்லது உலர்களம், காய்கறித்தோட்டம் ஆகியவை அமைத்திடவும் பயன்படுத்தலாம்.
- குட்டையானது குறைந்த பட்சம் 1.50 மீ ஆழம் வெட்டி எடுக்க வேண்டும்.

- மழை நீர் தேங்கும் வகையிலும், உபரி நீர் வடியும் வகையிலும் நிலம் தேர்வு செய்தல் சிறப்பு.
- களிமண் பாங்கான நீர் தேங்கும் தன்மையுடைய நிலம் பண்ணைக் குட்டைகள் அமைப்பதற்கு சிறப்பான தேர்வாக அமையும்.
- மணற்பாங்கான நிலமாக இருப்பின் 5 அடி ஆழம் தோண்டியபின் குட்டையின் அடிப்பரப்பில் சுமார் 15 செ.மீ கணத்திற்கு களிமண் பரப்பி நீர் தேக்கத்தினை அதிகரிக்கச் செய்யலாம்.

### பண்ணைக்குட்டைகள் அமைக்கும் முறை :

- பண்ணைக்குட்டைகள் அமைய உள்ள இடத்தின் நீளம் மற்றும் அகலத்தை அளந்து அதன் அடிப்படையில் பண்ணைக்குட்டையின் நீள அகலத்தை தீர்மானிக்கலாம்.
- அதாவது குட்டையின் நாற்புறமும் அமைய உள்ள கரையின் அளவு, கரைக்கும் குட்டைக்கும் இடையில் சுமார் 3 அடி அகலத்திற்கு காலியிடம் ஆகியவை இருக்கும்படி வடிவமைக்க வேண்டும்.
- கரையின் அகலம், உயரம் ஆகியவற்றை உத்தேசித்து தெளிவானதொரு வரைபடம் தயாரிக்கவும். அதாவது கரையின் அகலம் நிலத்தின் அளவிற்கேற்றவாறு 5 அடி முதல் 10 அடி வரை நிர்மானிக்கலாம்.
- குட்டையின் உள்பக்கம் சுவர் 1 : 1 சரிவில் அமைக்கப்பட வேண்டும்.
- கரையானது உள்பக்கம் சரிவு 1.5 : 1 மற்றும் வெளிப்பக்கம் சரிவு இடத்தின் அளவைப் பொருத்து 1 : 1 ல் அமைக்கவும்.
- அவ்வாறு குட்டையின் அளவுகள் மற்றும் வடிவமைப்புகள் தேர்வு செய்யப்பட்டவுடன் ஊரக விலைப்பட்டியலின்படி மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும்.
- மதிப்பீட்டில் குட்டையின் நீள அகலத்திற்கேற்றவாறு அப்பணிக்கு தேவைப்படும் மொத்த மனிதசக்தி நாட்கள் எண்ணிக்கை மற்றும் மொத்த வேலை நாட்கள் ஆகியவற்றை துல்லியமாக கணக்கிட்டு குறிக்கப்பட வேண்டும்.
- பெரிய அளவுள்ள பண்ணைக் குட்டைகள் (அதாவது 15 மீ X 15 மீ க்கு மேல்) அளவு செய்யும்போது ஆழத்தைப் பொறுத்து விலை நிர்ணயம் செய்வதுடன் கூடுதல் உயரம், கூடுதல் நீளம் ஆகியவற்றிற்கான Rate–ஐயும் கணக்கில் கொள்ள வேண்டும்.

## முன் அளவீடு (Pre-Marking)

- மதிப்பீட்டிலுள்ள வரைபடத்தின்படி உத்தேசிக்கப்பட்டுள்ள பண்ணைக்குட்டையின் அளவுகளை நிலத்தில் நூல்கயிறு மற்றும் மரக்குச்சிகளைக் கொண்டு வரைந்து கொள்ள வேண்டும்.
- கரையின் மாதிரி வடிவத்தை (Template) நான்கு புறங்களிலும் வேலை துவக்கத்திலே நிலை நிறுத்தி வெட்டப்படும் மண்ணை ஒருபுறமாக இருந்து கொட்டி கரையினை அமைத்திட தொழிலாளர்களை அறிவுறுத்த வேண்டும்.



- மாறாக வெட்டப்படும் மண்ணை கண்டபடி ஒரு ஒழுங்கின்றி கொட்டப்படும் பட்சத்தில், பின்னர் கரையின் வடிவமைப்பை சரி செய்வது மிகுந்த சிரமமாவதோடு கூடுதல் மனிதசக்தி நாட்கள் உத்தேசிக்கப்பட்டதை விட விரையமாக்கப்பட்டு பணி நிறைவு பெற தாமதமாகும்.
- குட்டை வெட்டும்போது ஒவ்வொரு அடியாக லேயர் ஆக வெட்டி எடுக்காமல், முழு ஆழத்திற்கும் அதாவது 5 அடி ஆழத்திற்கும், கரைப்பகுதியிலிருந்து மையத்தை நோக்கி வெட்டி எடுக்க வேண்டும். இல்லையேல், 1 அடி வெட்டிய பின்பு கடுமையான வெப்பம், தொழிலாளர்கள் தொடர்ந்து நடப்பதால் அடுத்த லேயரும் கடினமாகி தொழிலாளர்கள் வெட்டி எடுக்க சிரமப்படுவதுடன் அவர்களது வேலைத்திறன் குறையவும் வாய்ப்புள்ளது.



- கரையின் இடையில், வெட்டப்பட்ட மண்ணை எளிதில் கரையேற்றும்படி பாதை அமைத்துக் கொள்ளவும்.
- வெட்டப்பட வேண்டிய மண் கடினமாக இருப்பின் முதல் நாளே அப்பகுதியை ஈரப்படுத்தி எளிமையாக இருக்கும்படி தயார் செய்து கொள்ள வேண்டும்.
- உள்/வெளி நீரேற்றும் (Inlet / Out let) குழாய்களை கரை அமைப்பதற்கு முன் அதற்கான இடத்தில் பதித்து விட வேண்டும்.
- பண்ணைக்குட்டையின் தோற்றம் கரையின் அமைப்பைப் பொறுத்து அமைவதால் அதனை கவனமுடன் தினசரி சரிசெய்ய வேண்டும்.

## தொழிலாளர்கள் ஒதுக்கீடு செய்தல் :

- குட்டையின் அளவைப் பொறுத்து தேவைக்கேற்ப ஆட்களை அமர்த்த வேண்டும்.
- 25 மீ X 25 மீ அளவுள்ள குளம் எனில் சுமார் 50 தொழிலாளர்களையும் 15 மீ X 15 மீ அளவுள்ள குளம் எனில் 30 தொழிலாளர்களையும் பணியில் அமர்த்திக்கொள்ளவும்.

- வழிகாட்டி நெறிமுறைகளின்படி ஒவ்வொரு குழுவும் 20 நபர்களை கொண்டதாக பிரித்துக் கொள்ளவும். ஒவ்வொரு குழுவையும் சுமார் 2 அல்லது 5 நபர்கள் உள்ளவாறு உட்குழுக்களாக பிரித்துக் கொள்ளவும்.
- ஒவ்வொரு தொழிலாளியும் அவர்களின் முழு தினக்கூலியான ரூ.148/– ஐ முழுமையாகப் பெற்றிட சரியானபடி உபகரணங்கள் அதாவது ஒரு குழுவிற்கு 4 கடப்பாறைகள், 6 மண்வெட்டிகள், 10 கூடைகள் ஆகியவை கொண்டு வருவதை உறுதி செய்ய வேண்டும்.
- ஒவ்வொரு குழுவிற்கும் ஆறு நாட்களுக்குத் தேவையான அளவு, முன் அளவீடு செய்து கொடுக்கவும்.

### பணித்தளப்பொறுப்பாளர்கள் :

- நில உடமைதாரர், ஏற்கனவே வேலை அட்டை பெற்று பணியாளராக இருக்கும் பட்சத்தில் இப்பணிக்கு அவரையே பணித்தளப் பொறுப்பாளராக நியமித்துக் கொள்ளலாம்.

### கவனத்தில் கொள்ள வேண்டியவை :

- குட்டையின் நீள அகலத்திற்கு ஏற்றவாறு மதிப்பீட்டின்படி முன் அளவீடு செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்யப்பட வேண்டும்.
- முன் அளவீடு செய்யப்பட்டுள்ள அளவானது சரியான முறையில் Lead & Lift சேர்த்து கணக்கிடப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்யவும்.
- தொழிலாளர்கள் சிறு சிறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு அவர்கள் தொடர்ந்து குழு மாறாமல் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் பணிபுரிகிறார்களா என்பதை உறுதி செய்ய வேண்டும்.
- கரையின் மாதிரி வடிவமைப்பு அமைக்கப்பட்டு அதனடிப்படையில் கரை அமைக்கப்படுகிறதா என்பதை உறுதி செய்ய வேண்டும்.
- குட்டையின் கரையை நான்கு புறமும் ஆரம்ப நிலையிலேயே உயர்த்திவிட்டு பிறகு மண்ணை அப்புறப்படுத்த சிரமப்படாமல் கரையில் ஆங்காங்கே வழி ஏற்படுத்திக் கொள்வதுடன் குளத்திற்கு உள்ளும் நடப்பதற்கு ஏதுவாக சரிவு ஏற்படுத்திக் கொள்வதை உறுதி செய்ய வேண்டும்.



- பணித்தளப் பொறுப்பாளர்கள் ஒவ்வொரு நாளும் பணி துவங்குவதற்கு முன் அளவீடு செய்யப்பட்ட நூல் கயிறு சரியாக உள்ளதா என உறுதி செய்து கொள்ளவும். ஒவ்வொரு நாளும் பணி முடியும் போது ஒழுங்கான முறையில் அளவீடு செய்யப்பட்டுள்ள நூல் கயிறுக்குள் போடப்பட்டுள்ளதா என உறுதி செய்து கொள்ளவும்.
- சில சமயங்களில் வெட்டி எடுக்கப்பட்ட மண்ணை மேலே ஏறி வந்து கொட்டுவதற்கு பதிலாக அருகிலேயே கொட்டிவிடுவார்கள். அதற்கு சிறிதும் இடம் தரக்கூடாது. கண்டிப்புடன் நூல் கயிறுக்கு இடையில் கொட்ட வைக்க வேண்டும்.
- தொழிலாளர்கள் அனைவரும் உரிய உபகரணங்களான கடப்பாறை, மண்வெட்டி, கூடை ஆகியவற்றை கொண்டு வருகின்றனரா என்பதை உறுதி செய்ய வேண்டும்.

- ஒவ்வொரு வாரமும் பணி முடிவுற்ற நிலையில், ஒவ்வொரு குழுவும் செய்துள்ள வேலையின் அளவின் அடிப்படையில் ஊதியம் கணக்கிட வேண்டியது மிகவும் முக்கியமானதாகும்.

## நில மேம்பாடு செய்தல்:

- ஆதிதிராவிடர், பழங்குடியினர், சிறு மற்றும் குறு விவசாயிகளின் தரிசு நிலங்களை தேர்வு செய்யப்படவேண்டும்.
- அந்நிலத்தில் உள்ள புதர்கள் மற்றும் சிறு கற்கள் ஆகியவை அகற்றப்படவேண்டும்.
- கரடு முரடாக உள்ள நிலப்பரப்பினை ஒரே சீராக சமன் செய்யப்பட வேண்டும்.
- தோட்டப் பயிர்கள் நடவு செய்வதற்கு பயிருக்கு ஏற்றவாறு குழிகள் எடுத்தல் வேண்டும்.
- மேற்படி பயிர்களுக்கு தண்ணீர் தானாக பாய்ந்து ஓடும் வீதமாக சிறு வாய்கால்கள் வெட்டப்பட வேண்டும்.

**உதாரணமாக :**

I. தர்பூசணி கொடிக்கு **0.30** மீ X **0.30** மீ X 0.30 மீ அளவில் குழியும்

II. கத்திரி, வெண்டை, மிளகாய் ஆகியவற்றுக்கு **0.30** மீ X **0.30** மீ X 0.30 மீஅளவில் குழியும் மற்றும்

III. வாழைக்கு – **0.45** மீ X **0.45** மீ X 0.60 மீ அளவில் குழியும் வெட்டப்படவேண்டும்.

**குறிப்பு:** வாழை, தென்னை, வெண்டை, கத்திரி ஆகியவற்றிற்கு வேளாண்மை துறையில் கன்றுகளையும், விதைகளையும் பெற்று கொள்ளலாம்.

# 8. கருவேல மரம் நடுதல்
# (Pitting and Planting of Karuvela Tree)

ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு சொந்தமான சிறு பாசன குளங்கள், ஏரிகள் ஆகியவற்றில் கருவேல மரங்கள் நடலாம்.

## குழி தோண்டுதல் (Pitting for trees)

- ஒரு குழியின் அளவு 0.45 மீ X 0.45 மீ X 0.60 மீ எடுக்கப்படவேண்டும்
- ஒரு குழிக்கும் மற்றொரு குழிக்கும் 3 மீட்டர் அளவு இடைவெளி இருத்தல் வேண்டும்.
- ஒரு நபர் ஒரு நாளைக்கு 9 குழிகள் அல்லது 2 நபர்கள் சேர்ந்து ஒருவர் குழி தோண்டுதல் மற்றொருவர் குழியிலிருந்து மண் எடுத்தல் வேண்டும். இவ்வாறு செய்யும் போது இருவரும் 18 குழிகள் எடுக்கப்பட வேண்டும். இவ்வாறு பணியினை மேற்கொண்டால் மட்டும் ரூ.148/– என்ற இலக்கினை அடையலாம்.
- குழிகள் எடுக்கப்பட்டவுடன் மரங்கள் நடுதல் கூடாது, குழிகள் எடுக்கப்பட்ட 2 நாட்கள் விட்டு நடுதல் வேண்டும்.

## நடவு செய்தல் மற்றும் மண் நிரப்புதல் :

ஒரு நபர் ரூ.148/– கூலித்தொகை இலக்கினை அடைய, 47 குழிகள் மரம் நடவு செய்து மண் நிரப்புதல் வேண்டும்.

## செடிகளுக்கு நீர்பாய்ச்சுதல் :

ஒரு நபர் ஒரு நாளைக்கு ரூ.148/– ஊதியமாக பெறுவதற்கு சுமார் 100 மீட்டர் தூரத்திற்குள் தண்ணீர் சுமந்து வந்து 24 மரக்கன்றுகளுக்கு நீர் பாய்ச்சுதல் வேண்டும்.





## மரக்கன்று நடுதல் (TREE PLANTATION)

ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளின் இருபுறமும் நிழல் தரும் மரங்கள் நடுதல், ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் சிறு குறு விவசாயிகளின் நிலங்களில் பலன்தரும் மரங்களை நடுதல் மற்றும் கடற்கரையோரம் புயல், வெள்ளம் மற்றும் சுனாமி பாதுகாப்புக் கருதி மரக்கன்று நடுதல் வேண்டும்.

## செயல்படுத்தும் முறை : (Implementation process)

- சாலையின் இருபுறமும், மரம் நடும் இடத்தில் முட்புதர்களை அகற்றவேண்டும்.
- தார்சாலை ஓரத்திலிருந்து 3 மீ இடைவெளிவிட்டு மரம் நடுதல் வேண்டும்.
- ஒரு மரக்கன்றுக்கும் மற்றொரு மரக்கன்றுக்கும் இடையில் மரக்கன்றின் வகைக்கு ஏற்றவாறு உரிய இடைவெளிவிட்டு நடப்பட வேண்டும்.

## மரக்கன்றின் வகைகள் (Types of Trees)



வேம்பு, பூவரசம், புளியமரம், ஆலமரம், புங்கை, கொன்றை, நாவல் மரம், இலுப்பை மரம் ஆகியவற்றை தேர்வு செய்யலாம்.

## குழி தோண்டுதல் மற்றும் நடவு செய்யும் முறை (Pitting and Tree Plantation)

i. மர வகைக்கு ஏற்றவாறு குழிகள் எடுக்கப்படவேண்டும்.

ii. இரு நபர்கள் சேர்ந்து 30 குழிகள் எடுக்கப்பட வேண்டும், இதில் ஒருவர் குழி தோண்டவும், மற்றொருவர் மண்ணை வெளியில் எடுக்கவும் வேண்டும்.

iii. மரக்கன்று நடுவு செய்வதற்கு ஒரு நபர் ஒரு நாளைக்கு 15 மரக்கன்று நடுதல் மற்றும் மண் நிரப்புதல் வேண்டும்.

## தண்ணீர் பாய்சுதல் (Watering)

1. ஒரு நபர் ஒரு நாளைக்கு ரூ.148/– ஊதியமாக பெறுவதற்கு சுமார் 100 மீட்டர் தூரத்திற்குள் தண்ணீர் சுமந்து வந்து 24 மரக்கன்றுகளுக்கு நீர் பாய்ச்சுதல் வேண்டும்.
2. *மர கன்றுகள் நட்ட பிறகு, அவைகள் நன்றாக வளர்வதற்கு நீர்பாய்சுதல் வேண்டும்.*

## 9. தூய்மை பாரத இயக்கம் (NBA) – மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதித்திட்டத்துடன் இணைந்து தனிநபர் இல்லக்கழிப்பறை கட்டுதல்


### பணித்தள மேற்பார்வையாளர் பணிகள்


அ) 20–25 தனிநபர் இல்ல கழிப்பறை பயனாளிகளை ஒருங்கிணைத்து ஒரு தொகுப்பாக கட்டுமானப் பணிகளை கண்காணித்தல்.

ஆ) ஒதுக்கீடு செய்யப்பட்ட கிராம ஊராட்சி / குடியிருப்புப் பகுதியின் தனிநபர் இல்லக் கழிப்பறைகளுக்கான தினசரி வருகைப் பதிவேட்டினை பராமரித்தல்.

இ) திறன் சாரா / திறன் சார்ந்த பணியாளர்கள் வருகையை அதற்குரிய வருகைப்பதிவேட்டில் பதிவு செய்தல். திறன்சாரா பணியாளர்கள் பயன் அடையும் குடும்ப உறுப்பினர்களாக தேர்வு செய்வது நன்று.

ஈ) ஒப்புதல் அளிக்கப்பட்ட வடிவம் அல்லது அதற்கு மேம்பட்ட வடிவில் கழிப்பறை கட்டப்படுவதை உறுதி செய்தல்.




1. கழிவறை மட்டும் எனில் உள் அளவு 2.5 அடிக்கு 2.5 அடி அளவில் அஸ்திவாராமும், 1.5 அடி அகலம் 2 அடி ஆழத்திற்கு மண் வேலையும் செய்ய வேண்டும்.

2. குளியல் அறையுடன் கூடிய கழிவறை எனில் உள் அளவு 4.5 அடிக்கு 2.5 அளவில் அஸ்திவாரமும், 1.5 அடி அகலம் 2 அடி ஆழத்திற்கு மண் வேலையும் செய்ய வேண்டும்.

3. உறிஞ்சுக்குழி கழிப்பறை எனில் 3.5 அடி விட்டம் 3.5 அடி ஆழத்திற்கு இரட்டை குழிகளுக்கான மண் வேலை செய்ய வேண்டும்.

4. செப்டிக்டேங் கழிவறை எனில் 7 அடி நீளம் 4.5 அடி அகலம் 5 அடி ஆழத்திற்கு மண் வேலை செய்ய வேண்டும்.



உ) பணி துவங்கப்பட்ட 15 தினங்களுக்குள் தனிநபர் இல்ல கழிப்பறை கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவர செய்தல்.

ஊ) பணி முடிவடைந்தவுடன் தினசரி வருகைப் பதிவேட்டில் புகைப்படத்துடன் உரிய ஒப்பங்கள் செய்து பணி மேற்பார்வையாளர் வசம் ஒப்படைத்தல்.



## 10. மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு ஏற்பாடுகள்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் மாற்றுத் திறனாளிகளும் பயன்பெறும் வண்ணம் பல்வேறு சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவர்கள் உடல் ஊனம் 40% க்கு அதிகமாக இருக்க வேண்டும். மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலரால் வழங்கப்பட்ட அடையாள அட்டை / தேசிய அடையாள அட்டை பெற்றிருக்க வேண்டும்.



1. நல்ல உடல் தகுதி உடைய பணியாளர் செய்யக் கூடிய வேலையில் பாதி அளவு வேலை உழைப்பு செய்தாலே இவர்களுக்கு ஒரு நாளைக்கான முழு ஊதியம் ரூ.148/– ஐ இவர்களுக்கு வழங்கலாம்.
2. பணிக்கு வரும் பணியாளர்கள் குழந்தைகளை பார்த்துக் கொள்ளுதல், பணியாளர்களுக்கு குடி தண்ணீர் வழங்குதல் போன்ற பணிகளை இவர்களுக்கு ஒதுக்கலாம்.
3. உடலுழைப்பைக் கொண்டு பணிபுரிய விருப்பமுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு, முழு உடல் தகுதி பெற்று பணி செய்யும் பணியாளர்களின் பணிக்கான அளவீடு இலக்கில் பாதி அளவு மட்டுமே இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



## 11. அலுவலக நடைமுறைகள்

- தினசரி வருகைப் பட்டியல் பெற்றவுடன் வார இறுதி (புதன் மற்றும் வியாழன்) நாளில் பணித்தளத்தில் அளவீடு செய்து அளவு புத்தகத்தில் பதிவு செய்து பட்டியல் தயாரிக்க வேண்டும்.
- அளவுகள் குழு வாரியாக அளவு புத்தகத்தில் பதிவு செய்த விவரத்தினை, குழு பெயரை வைத்து மாறாமல் NMR பட்டியலில் அதே குழுவின் பெயரில் பதிவு செய்ய வேண்டும்.
- இவ்வாறு அளவீடுகளில் ஒரு குழுவினருக்கு கிடைக்கப் பெற்ற மதிப்பினை அக்குழுவின் மொத்த மனித சக்தி நாட்களை கணக்கிட்டு சரியான தொகையினை ஒவ்வொரு பயனாளிகளுக்கு எதிரில் பதிவு செய்திட வேண்டும்.
- தினசரி வருகை பட்டியல் பதிவு முடிவு பெற்றவுடன் ஒவ்வொரு பட்டியலின் இறுதியில் குறிப்பிட்டுள்ள வேலை செய்த விவரங்கள் பதிவு செய்து கையொப்பம் இட வேண்டும்.
- ஒவ்வொரு வருகை பட்டியலிலும் பதிவு செய்து ஒப்பமிட்ட பின்னர் சுருக்கத்தின் கீழே குறிப்பிட்டுள்ள சான்றிதழ் பகுதியில் அளவு புத்தக எண் விவரம் குறிப்பிட்டு கையொப்பம் இட வேண்டும்.
- இதனை துணை வட்டார வளர்ச்சி அலுவலரிடம் (மகாதேஊவேஉதி) ஒப்படைக்கப்படவேண்டும்.
- இவற்றை சரிபார்த்து வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும்.

## 12. ஊதியம் வழங்குதல்

மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் வாராந்திர அடிப்படையில் தொழிலாளர்களுக்கு கூலித்தொகை பின்வருமாறு 3 வழிகளில் வழங்கப்படுகிறது.

### 1) ரொக்கமாக வழங்குதல் :

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களின் செயலாணை அடிப்படையில் கிராம ஊராட்சி MGNREGS திட்டக்கணக்கில் இருந்து ஊதியம் ஊராட்சி செயலரால் வங்கியில் இருந்து ரொக்கமாக பெற்று ஊதியம் வழங்கும் குழுவின் முன்

வழங்கப்படுகிறது. தொகை பெற்றமைக்கு பணியாளர்கள் ஒப்பம் வருகைப் பதிவேட்டில் பெறப்படுகிறது. தொகை பெற்று வழங்கும் நாளில் பணிக்கு வராத தொழிலாளர்களின் ஊதியம் 24 மணிநேரத்தில் அவர்களின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

### 2) வங்கி சேமிப்புகணக்கில் ECS மூலம் ஈடு செய்தல் :

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களின் செயலாணை அடிப்படையில் ஊராட்சி செயலரால் காசோலை தயாரிக்கப்பட்டு தொடர்புடைய தொழிலாளர்களின் வங்கிக் கணக்கு விபரத்துடன் வங்கியில் கொடுக்கப்பட்டு ஊதியம் பணியாளர் வங்கிக் கணக்கில் நேரடியாக ECS மூலம் ஈடு செய்யப்படுகிறது.

### 3) EFMS (மின்னணு நிதி மேலாண்மை திட்டம்) மூலம் ஈடு செய்தல் :

இம்முறையில் தொழிலாளர்களின் ஊதியம் வங்கிக் கணக்கில் EFMSமுறை மூலம் நேரடியாக ஈடு செய்யப்படுகிறது. அளவீடு செய்து ஊதியம் ஒப்படைக்கப்பட்ட வருகைப் பதிவேடு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பெறப்பட்டவுடன் இதனை கணிணியில் வலைதளத்தில் உள்ளீடு செய்து ஊதியப்பட்டியல் (Wage List) தயார் செய்யப்படுகிறது. பின்னர் இது சரிபார்க்கப்பட்டு FTO (பணபரிவர்த்தனை ஆணை) மூலம் நேரடியாக தொழிலாளர்களின் வங்கி சேமிப்புகணக்கிற்கு ஈடு செய்யப்படுகிறது.

மேலே கண்டுள்ளவாறு 2 மற்றும் 3ல் ஈடு செய்யப்படும் ஊதியமானது தொழிலாளர்களுக்கு தாமதமின்றி வழங்கிட வங்கிகள் “வியாபார முகவர்களை (Business Correspondent) நியமனம் செய்துள்ளது. இவர்கள் குறிப்பிட்ட நாட்களில்அந்தந்த கிராமங்களுக்கு நேரில் சென்று கையடக்க ATM கருவி மூலமாக Smart card ஐ பயன்படுத்தி தொழிலாளர்களுக்கு அவர்களின் ஊதியத்தொகை ரொக்கமாக வழங்கி வருகின்றது. இதனை ஊராட்சிமன்ற அலுவலகம், பணித்தளம் அல்லது பொதுவான ஓரிடத்தில் வைத்து வழங்கப்படவேண்டும். எக்காரணம் கொண்டும் ஊராட்சி தலைவர் வீட்டிலோ அல்லது மதசம்பந்தமான இடத்திலோ வைத்து வழங்கக் கூடாது.

### பணித்தள பொறுப்பாளர்கள் ஊதியம் :

பணித்தள பொறுப்பாளர்கள்பகுதி திறன் சார்ந்த தொழிலாளர்களாக (Semi Skilled Labour) கருதப்பட்டு அவர்களுக்கு அரசு நிர்ணயித்த அதிகபட்ச 1 நாளைக்கான

ஊதியத் தொகை (தற்சமயம் ரூ.148/-) கணக்கிட்டு வழங்கப்படும். இதற்கான பட்டியல் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (MGNREGS) மூலம் தயாரிக்கப்பட்டு வங்கி வாரியாக வங்கி வரைவு (அ) காசோலை தயாரிக்கப்பட்டு பணித்தள பொறுப்பாளரின் வங்கி சேமிப்புக் கணக்கில் வாரம் தோறும் ECS மூலம் ஈடு செய்யப்படும்.

## 13. பணித்தள பொறுப்பாளர்கள் செய்யக்கூடாதவை

- பணித்தள பொறுப்பாளர் காலதாமதமாக வரக்கூடாது.
- பணித்தள பொறுப்பாளர் தனக்கு பதிலாக வேறு எவரையும் இப்பணி செய்ய அனுமதிக்க கூடாது.
- உரிய முன் அளவீடின்றி தொழிலாளர்களை வேலை செய்ய அனுமதிக்க கூடாது.
- வேலை அட்டை இல்லாத தொழிலாளர்களை வேலை செய்ய அனுமதிக்க கூடாது.
- தொழிலாளர்களை 20 நபர்கள் கொண்ட குழுக்களாக பிரிக்காமல் அனைவரையும் ஒன்றாக வேலை செய்ய அனுமதிக்க கூடாது.
- முன் அளவீடு செய்து வேலை ஒதுக்கீடு செய்யப்பட்ட தொழிலாளர்களை அவர்களுக்கு உரிய இடங்களிலிருந்து வேறொருவரின் இடத்தில் வேலைசெய்யவோ, தேவையற்ற செயல்களில் ஈடுபடவோ அனுமதிக்க கூடாது.
- ஒவ்வொரு குழுவில் உள்ள நபர்களும் அந்த வாரம் பணி முடியும் வரை வேறு குழுவிற்கு மாறுவதற்கு அனுமதிக்க கூடாது.
- வாரத்தின் முதல் நாளில் ஏற்படுத்தப்பட்ட ஒரு குழுவில் ஒருசிலர் தவிர்க்க முடியாத காரணங்களால் வாரத்தின் இடைப்பட்ட நாட்களில் வேலைக்கு வர இயலவில்லையெனில் அக்குழுவினை கண்டிப்பாக மாற்றியமைக்க கூடாது.
- தினசரி தொழிலாளர்கள் வருகை குறித்த அறிக்கையை வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு தெரிவிப்பதில் காலதாமதம் செய்யக்கூடாது.
- ஒவ்வொரு வாரமும் பணி முடிவுற்றவுடன் வருகை பதிவேட்டினை முழுமையாக பூர்த்தி செய்யாமல் அரைகுறையாக காலதாமதமாக வட்டார வளர்ச்சி அலுவலருக்கு சமர்ப்பிக்க கூடாது.

## தொழிலாளர்கள் ஒவ்வொருவரும் ஒரு நாளைக்கு நிர்ணயிக்கப்பட்ட ரூ.148/– ஐ ஊதியமாக பெறுவதற்கு செய்ய வேண்டியவை :

1. தொழிலாளர்கள் பணித்தளத்திற்கு உரிய நேரத்திற்கு வருகை புரிதல் வேண்டும்.

2. ஒரு நாளைக்கு மதிய உணவு இடைவேளை நீங்கலாக கண்டிப்பாக 8 மணிநேரம் வேலை செய்ய வேண்டும்.

3. தொழிலாளர்கள் தங்களுக்குள் குழுக்களாக பிரியும்பொழுது ஒவ்வொரு குழுவிலும் சரியான விகிதாசாரத்தில் ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோர் சமஅளவில் பங்குபெறும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

4. ஒவ்வொரு குழுவினரும் குறைந்த பட்சம் 4 கடப்பாறைகள், 6 மண்வெட்டிகள் மற்றும் 10 கூடைகள் முதலியவற்றுடன் வேலைக்கு வரவேண்டும்.

5. பணித்தள பொறுப்பாளர்கள் ஒவ்வொரு குழுவினருக்கும் அவர்கள் வேலை செய்ய வேண்டிய அளவுகளை தினசரி உரிய நேரத்தில் முன் அளவீடு (Pre Marking) செய்து கொடுக்க வேண்டும்.

6. தினசரி மாலையில் பணி முடிவுற்றதும் ஒவ்வொரு குழுவினருக்கும் அவர்கள் செய்துள்ள பணியின் அளவு மற்றும் ஊதியத்தினை உத்தேசமாக பணித்தள பொறுப்பாளர் தெரிவிக்க வேண்டும்.

7. பணித்தள பொறுப்பாளர் அளவீடு செய்து கொடுத்துள்ள அளவிற்கு முழுமையாக வேலையை செய்து முடிக்க வேண்டும்.

8. ஒவ்வொரு குழுவினரும் ஒரே கும்பலாக வேலை செய்யாமல் அவர்களுக்குள்ளேயே உபகுழுக்களாக அதாவது 5 பேர் வீதம் 4 குழுக்களாக பிரிந்து மண்வெட்ட வேண்டிய குழியையும் 4 பாகங்களாக பிரித்துக் கொண்டு வேலை செய்யலாம்.

9. தொழிலாளர்கள் தமக்கு வழங்கப்பட்டுள்ள வேலையை தவிர தேவையற்ற செயல்களில் ஈடுபடக் கூடாது.

10. மண் வெட்டுமிடம் கடினமாக இருந்தால் முதல் நாளே குழு நபர்களோ அல்லது நில உடமைதாரரோ அப்பகுதியில் தண்ணீர் நிரப்பி வேலையை எளிதாக்கி வைக்கலாம்.

11. ஏரி, குளம் மற்றும் குட்டைகளில் மண் வெட்டும்போது ஒவ்வொரு அடியாக லேயர் ஆக வெட்டி எடுக்காமல், முழு ஆழத்திற்கும் அதாவது 5 அடி ஆழத்திற்கும், கரைப்பகுதியிலிருந்து மையத்தை நோக்கி வெட்டி எடுக்க வேண்டும். இல்லையேல், 1 அடி வெட்டிய பின்பு கடுமையான வெப்பம், தொழிலாளர்கள் தொடர்ந்து நடப்பதால் அடுத்த லேயரும் கடினமாகி தொழிலாளர்கள் வெட்டி எடுக்க சிரமப்படுவதுடன் அவர்களது வேலைத்திறன் குறையவும் வாய்ப்புள்ளது.

12. ஆழமான குளம், ஏரிகளின் கரைகள் மற்றும் உயரமான சாலைகளை பலப்படுத்தும் பணிகள் நடைபெறும்போது எளிதில் மேலே ஏறிவந்து மண்ணை கொட்டுவதற்கு ஏதுவாக ஆங்காங்கே படிகள், வழிகள் அமைத்துக்கொள்ள வேண்டும்.

13. தொழிலாளர்கள் தங்கள் வேலை செய்த குழியிலுள்ள தண்டு மற்றும் முண்டுகளை (Deadmans) அளவு மற்றும் மேலளவு செய்யப்படும் வரை சேதமாகாமல் பாதுகாக்க வேண்டும்.

14. தொழிலாளர்கள் ஒவ்வொருவரும் தங்களது பொறுப்புகளை உணர்ந்து தமக்கு வழங்கப்பட்டுள்ள பணி இலக்கினை அடைய நேர்மையான வழியில் பணிபுரிய வேண்டும்.

15. தொழிலாளர்கள் தங்களால் செய்யப்பட்டுள்ள வேலையினை அலுவலர்களால் அளவு மற்றும் மேலளவு செய்யப்படும்போது உடனிருந்து விடுதல் ஏதுமின்றி முழுமையாக அளக்கப்பட்டுள்ளதா, சரியான முறையில் ஊதியம் கணக்கிடப்பட்டுள்ளதா என்பதை ஒவ்வொருவரும் உறுதி செய்திட வேண்டும்.



பணித்தள பொறுப்பாளர்கள் தங்களது பொறுப்பு மற்றும் கடமைகளை நிறைவேற்ற மேற்காணும் குறிப்புகளை கவனத்துடன் பின்பற்றி பணியினை செம்மையாக முடிப்பதுடன் தொழிலாளர்கள் முழு ஊதியத்தை பெறும் வகையில் அவர்களை வழிநடத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## குறிப்புத் தாட்கள்

| வஎண். | நாள் | குறிப்புகள் விபரம் |
|---|---|---|
| | | |

## குறிப்புத் தாட்கள்

| வ.எண். | நாள் | குறிப்புகள் விபரம் |
|---|---|---|
| | | |

## குறிப்புத் தாட்கள்

| வ.எண். | நாள் | குறிப்புகள் விபரம் |
| --- | --- | --- |
| | | |

## குறிப்புத் தாட்கள்

| வ.எண். | நாள் | குறிப்புகள் விபரம் |
| --- | --- | --- |
| | | |